உலகத்திலேயே மிக சக்திவாய்ந்த அலுவலக மான வெள்ளை மாளிகைக்கு (White House) வந்து ஆட்சி செய்யப் போகும், ஜோபெய்டன் தனக் கென்று ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கி, உலகத்தையே நல்ல முறையில் வழிநடத்த வேண்டும்.

மனிதகுல மேம்பாடு, பொருளாதாரம், மற்றும் பல வளர்ச்சி திட்டங்களோடு வரும் நவம்பர் 3ம் தேதி 2020இல் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் சார்பாக களம் இறங்கி அதிபராகப் போகும் திரு. ஜோ பெய்டன் இவரது முழுப்பெயர். ஜோசப் ராபின் னெட் பெய்டன் உலக மக்கள் மற்றும் அமெரிக்க மக்களிடம் நன்மதிப்பைப் பெற்று வெற்றியின் படிகளில் உள்ளார். திரு.ஜோ பெய்டன் அவர் களின் கைகளில் உள்ள விஷயங்களைக் காண்போம்.


இவர் நவம்பர் 20ஆம் தேதி, 1942இல் சகர்டான், பெனிஸ்லுவேனியாவில் பிறந்தவர். 77 வயதாகும் இவர் இரண்டு முறை, ஜனவரி 2009 முதல் ஜனவரி 2017 வரை துணை அதிபராக இருந்துள்ளார். இவர் 1970 முதல் ஜனநாயகக் கட்சிக்கு நன்கு உழைத்து பல நற்பெயர்களைப் பெற்றுள்ளார்.

**கையின் அமைப்பு**

திரு. ஜோபெய்டன் அவர்களின் கைகள் 'அக்னி' வகையைச் சார்ந்தது.

உள்ளங்கைகளின் நீளம் சராசரியாகவும் உள்ளது. இவருடைய கைகளை நோக்கும்போது, அரசியல், சட்டத்துறை மற்றும் சிறந்த எழுத் தாளர், பொதுத்துறை தவிர நல்ல அரசாளும் யோகத்தைப் பெற்றவர். கிரகமேடுகள் சீராகவும், ஒளிவீசக் கூடிய அளவில் கிரகங்களின் பலம் பொருந்திய ஆதிக்கங்களையும் காண்பிக்கின்றது. இதன்மூலம் இவருடைய அறிவுத்திறன், ஆட்சி நடத்தும் திறன், மக்களிடம் செல்வாக்கு மிகுந்த படிப்பறிவு, சிறந்து முடிவெடுக்கும் திறன் எல்லாம் ஒருங்கிணைந்து காணப்படுகிறது.

**குருவிரல் மற்றும் குருமேடு :** இவருடைய



குருவிரலும், குருமேடும் நன்கு வளமாக உள்ளமையால் உலகத்திற்கும், அமெரிக்க மக்களுக்கும் தன்னுடைய ஆட்சியின் மூலம் பல நன்மைகளை செய்வார். இவருடைய குருமேடு தெய்வ நம்பிக்கையை காண்பிக்கின்றது.

**மோதிரவிரல் மற்றும் சூரியமேடு :** இவருடைய சூரியமேடு நன்கு படர்ந்து, உப்பலாகவும் சூரியவிரல் நன்கு உருண்டையாகவும் சூரிய விரலும், குரு விரலும் ஒரே அளவில் உள்ளமையும், இளம் வயதிலேயே பல வெற்றிகளையும் புகழையும் பெற்று, பின்னர் உலகளாவிய மாபெரும் அந்தஸ்து வகிக்கப்போவதைக் காண்பிக்கின்றது.


**கட்டைவிரல் மற்றும் சுக்கிரமேடு :** கைகளின் தலை மற்றும் சுக்கிரமேட்டின் தலையாகிய இவருடைய கட்டைவிரல் ஸ்திரத் தன்மையையும், சுக்கிரமேடு பல யோகங்களையும் காண்பிக்கின்றது. இதன்மூலம் மிக அதிநுட்பமான விஷயங்களைக் காண்போம். அமெரிக்கா வரலாற்றில் 77ம் வயதில் ஜனநாயகக் கட்சி சார்பில் அமெரிக்க அதிபராக பதவியேற்கப் போகும் வயது முதிர்ந்தவர் என்ற முதல் பெருமையையும், வானளாவிய புகழும், பெயரும் பொன் எழுத்துக்களால் பொறிக்கக் கூடிய தருணம் வந்துவிட்டது. இவர் வெள்ளை மாளிகையின் அரியணையில் ஏறி அமெரிக்காவை திறம்பட இயக்குவார்.

**சுண்டுவிரல் மற்றும் புதன் மேடு :** திரு.ஜோ பெய்டன் அவர்களின் சுண்டுவிரல் மற்றும் புதன்மேடு பிரகாசமாகவும், லட்சணமாகவும் உள்ளமையில் இவரின் அரசியல் வாழ்க்கை, நிர்வாகத்திறன் மற்றும் உல சுகாதார பராமரிப்பு மற்றும் உலக மக்களின் ஆரோக்கியம் சம்பந்த மான பல விஷயங்களை ஆக்கப்பூர்வமாக உலகிற்கு அளிப்பார்.

**நடுவிரல் மற்றும் சனிமேடு :** இவருடைய நடுவிரலும் சனிமேடும் வல்லமை பொருந்திய தீர்க்கமான தன்மையையும், நடுநிலைமையோடு ஆட்சி செய்யும் திறனையும் வெளிப்படுத்துகிது.

**ரேகைகளின் அமைப்பு :** திரு. ஜோ பெய்டன் கைகளில் உள்ள ரேகைகள் மற்றும் உபரேகைகள், கிரக மேடுகளின் அமைப்புப்படி இவருடைய 77வது வயது முதல் 92 வயது வரை பொற்காலம் என காண்பிக்கின்றது. இவருடைய 77வது முதல் 89 வயதுவரை வல்லமையான வளமான, ஐஸ்வர்யமான காலங்களை காண்பிப்பதால் அமெரிக்க அதிபராக பொறுப்பேற்று பல நல்ல பலன் தரக்கூடிய விஷயங்களை உலக மக்களுக்கு அளிப்பார்.

**கையெழுத்துப்பலன் :** திரு. ஜோ பெய்டன் அவர்களின் கையெழுத்து ஆரம்பத்தில் நீண்ட கோல் போல் உள்ளமை அவருடைய சிந்தனா சக்தி அடிமட்டம் முதல் மேல் மட்டம் வரை மிகவும் ஆழ்ந்த சிந்தனையோடும், பெய்டன் என்ற இடத்தில் கீழ் கப்பல் போன்ற சின்னம் இருப்பதாலும், கையெழுத்து மேல் முகமாக உள்ளமை, இவர் நல்ல ஆரோக்கியத்துடன் செயல்படுவார் என்பதை காண்பிக்கின்றது.




## தினசரி செய்ய வேண்டிய கடமைகள்



குறைந்த பட்சம், ஒரு ஆலயம் சென்று, மனமொன்றி வழிபடவேண்டும்! அப்படி அல்லாதவர்கள், காலையிலும், மாலையிலும் இரண்டு நாழிகை, இல்லத்தில் நெய் விளக்கேற்றி, உயர்வான முறையில் வாசனாதி திரவியங்களை இட்டு, அமைதியாக, ஏதாவது ஒரு இறை நாமாவளியை சொல்லி வரவேண்டும்.

மனைவியானவள் இல்லற கடமைகளை ஆற்றுவதும், கணவனானவன் பணியில் உள்ள கடமைகளை ஆற்றுவதும், பிள்ளைகள் கல்வியில் உள்ள கடமைகளை ஆற்றுவதும் வேண்டும். எதையும், ஒத்தி வைக்காமல், உடனுக்குடன் நேர்மையான முறையில் செய்கின்ற ஒரு பழக்கத்தை கடைபிடித்துக் கொண்டே, இறைவழிபாடு, தர்மகாரியங்கள் செய்வது கட்டாயம், இறைவனை நோக்கி அழைத்துச் செல்லும்.

# அமெரிக்க தேர்தலில் கமலா ஹாரிஸ்



திரு. ஜி.எஸ். மோகன் விஸ்வநாதன் கைரேகை சாஸ்திரத்தின் மூலம் ஐந்து அமெரிக்க தேர்தலில் போட்டியிட்ட அதிபர்களின் வெற்றியைத் துல்லியமாக கணித்தவர். தவிர பல நாட்டு அரசியல் தலைவர்களின் வெற்றியையும் கணித்தவர். இவர் 37 ஆண்டுகாலம் கைரேகை சாஸ்திரத்தில் ஆராய்ச்சி செய்து சுமார் 70,000 பேருடைய கைகளை ஆராய்ந்தவர். இவருடைய கைரேகை சாஸ்திர கட்டுரைகள் எண்ணற்ற புத்தகங்களிலும், நாளிதழ்களிலும் வெளிவந்துள்ளது.

இந்த இதழில் திருமதி கமலா ஹாரிஸ் அமெரிக்க துணை அதிபரர்க போட்டியிடும் கைகளைப் பற்றி பார்ப்போம். திருமதி கமலா ஹாரிஸ் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர். குறிப்பாக நம் தமிழ்நாட்டில் சேர்ந்தவர். அவருடைய கைகளைப் பற்றிப் பார்ப்போம்.

**கைகளின் அமைப்பு :** திருமதி கமலா ஹாரிஸ் 1964ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 20-ஆம் தேதி கலிஃபோர்னியாவில் பிறந்தவர். கைகள் கூம்பு வடிவமாகவும்,, நன்கு இடைவெளி உள்ள்விரல்கள் இவருடைய புனிதத்தன்மையையும், குரு விரலும், சூரிய விரலும் கிட்டத் தட்ட சமநிலைமையில் உள்ளமை இலக்கியம், அரசியல் மற்றும் பல ஐஸ்வர்ய அம்சங்களை கொண்டுள் ளது.

**குருமேடு :** இவருடைய குருமேடு நன்கு உள்ளமை ஆன்மீகம் மற்றும் மனித நேயத்துடன் செயல் படுபவர், நல்ல உடல்வாகு உடையவர் என்பதையும் காண்பிக்கின்றது.

**சனிமேடு :** இவருடைய சனிமேடு பரவலாக உள்ளமை சட்டத்துறையில் வல்லுநர் என்பதையும், பல ஆக்கப் பூர்வமான செயல்களை செய்பவர் என்பதையும் காண்பிக்கின்றது.

**சூரிய மேடு :** திருமதி கமலா ஹாரிஸின் சூரிய மேடு மிகவும் பிரதான மான மேடாகும். இளம் வயதிலேயே அரசியலில் மிகவும் நாட்டம் கொண்டு, அமெரிக்க செனட் சபையில் ஜனநாயக கட்சியின் மிகச் சிறந்த உறுப்பினராக உள்ளார்.

இவருடைய சூரிய மேட்டின் மூலம் பல நற்பெயர்களையும் புகழையும் குவித்துள்ளமையை காண்பிக்கின்றது. வரும் துணை அதிபர் தேர்தலில் திரு. ஜோபெய்டன் அவர்களுடன் திறமையாக ஆட்சி செய்யும் வல்லமையை காண்பிக்கின்றது.

**புதன்மேடு :** இவருடைய புதன்மேடு மற்றும் சுண்டு விரல் சற்று நீளமாக உள்ளமை நல்ல பேச்சுத்திறன், செயல்திறன், அதிக புத்தி சாதுர்யம்



போன்றவற்றை காண்பிக்கின்றது.


**செவ்வாய்மேடு :** இவருடைய செவ்வாய் மேடு மிகவும் பலமாக உள்ளமையும், இவருடைய புத்திரேகை மேல் செவ்வாய் மேட்டில் முடிவதும், எதையும் சாதிக்கலாம் என்ற உத்வேகத்துடன் ஜெயித்துக் காட்டுவார். தன் மேல் ஆழ்ந்த நம்பிக்கையை காண்பிக் கின்றது.

**சந்திர மேடு :** இவருடைய சந்திரமேடு நன்கு உப்பலாக உள்ளமை, பல திறமையான விஷயங் கள், கடவுள் பக்தி மற்றும் இயற்கையின் மேல் உள்ள ஆர்வம் போன்றவற்றை காண்பிக்கின்றது.

**சுக்கிர மேடு :** இவருடைய சுக்கிரமேடு நன்கு படர்ந்து உள்ளமை, குடும்ப வாழ்க்கையில் மிகுந்த ஆர்வத்துடன் மற்றும் சமூக நலனில் அக்கறை, நிதிநிலையில் நன்கு உள்ளமையையும் காண்பிக்கின்றது.

**கட்டை விரல் :** இவருடைய நீண்ட கட்டை விரல் இவர் வாழ்நாள் முழுவதும் பொதுத்துறை யிலும், சமூகத்திலும், அரசியலிலும் பெரிய பதவி களை வகிப்பார்.

**ரேகைகள் :** இவருடைய ஆயுள் ரேகை, புத்தி ரேகை, இருதய ரேகை மற்றும் விதி ரேகையைக் கணக்கிடும் போது இவர் நீண்ட ஆயுளுடன் இருப்பார். இவருக்கு தனது 53 வயதில் நல்ல காலம் துவங்கி உள்ளது. ஆயுள் ரேகையை ஒட்டியுள்ள ரேகை 54 - 55 ஆம் வயது பொற் காலம். இனி வரும் 14 ஆண்டுகள் அதாவது இவருடைய 67ஆம் வயதுவரை பொற்காலம் இவர் 54 - 55 வயதில் அமெரிக்க துணை அதிபராக அதிசு வாய்ப்புகள், மற்றும் அரசாளும் யோகம்



இவருக்கு உண்டு. ரேகைகளின் அம்சங்கள் இவருடைய வெளிப்படை தன்மையையும், சாதுர்யமாக செயல்படும் திறனையும் காண்பிக் கின்றது.

**திருமதி கமலா ஹாரிஸின் கையெழுத்துப் பலன்**

இவருடைய கையெழுத்தில் ஆரம்பத்தில் உள்ள கீழ் நோக்கிய வில் வடிவம் மிகவும் ஆழ்ந்து சிந்தனை செய்து அதில் பல நுணுக்கங்களை புகட்டி வெற்றியை நிலைநாட்டுவார்.

இவருடைய கையெழுத்தில் ஒன்பது சுழல்கள் உள்ளமை (Loops) இவருடைய உடல் வலிமையையும், இவருடைய தனித்துவமான திறமையையும் காண்பிக்கின்றது. இவை எல்லா விஷயங்களையும் மிகவும் உற்றுநோக்கி செயல் படுத்துவார் என்பதையும், நீண்ட ஆயுளையும் காண்பிக்கின்றது. இவருடைய கையெழுத்தின் கடைசியில் உள்ள நீண்ட கோடு மிகவும் பரந்த மனப்பான்மையுடன், பிறரை மகிழ்ச்சியில் ஆழ்த்தி, குஷிப்படுத்தும் திறன் மற்றும் பல கோணங்களில் ஒரு விஷயத்தை ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கும் திறனை காண்பிக்கின்றது. மேல் நோக்கி உள்ள இரு புள்ளிகள் பிறர் சொல்லுக்கு செவி மடுத்து ஆவன செய்வதை காண்பிக்கிறது. இவருடைய கையெழுத்துப்படி வெற்றி நிச்சயம்.

## தெய்வீக திருத்தல விருட்சங்கள்

**வில்வ மரம் :** தெய்வாம்சம் பொருந்திய 5 மரங்களில் ஒன்று வில்வ மரம். சிவனுக்கு உகந்த மரம் இது. வில்வ இலையில் மகாலட்சுமி குடி கொண்டுள்ளாள். திருநெல்வேலி மாவட்டம் நித்யகல்யாணி ஆலயத்தில் உள்ள வில்வ மரத்தின் பழம் சிவலிங்க வடிவமாக உள்ளது.

**வன்னி மரம் :** தஞ்சை பெரிய கோயிலில் 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட வன்னி மரம் உள்ளது. திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோயிலில் வன்னி மரம் உள்ளது.

**குரா மரம் :** திருவிடைச்சுழி திருத்தலத்தில் குரா மரம் உள்ளது. குராவைத் திருப்பிப் போட்டால் ராகு என்று வரும்.

**மருத மரம் :** ஆந்திர மாநிலம் ஸ்ரீசைலம் மல்லிகார்ஜுனேஸ்வரர் ஆலயத்தில் இம்மரம் உள்ளது. சுமார் 90 அடி உயரம் வளரும். திருவிடைமருதூரின் தல விருட்சம் மருதமரம்.

**மகிழ மரம் :** திருவண்ணாமலையின் தல விருட்சம் இம்மரம்.

**பன்னீர் மரம் :** திருச்செந்தூர் தல விருட்சம் இம்மரம். இந்த மரத்தின் இலையில்தான் விபூதிப் பிரசாதம் வழங்குகின்றனர்.

**மந்தார மரம் :** குருவாயூர் கோயிலின் தல விருட்சம். இதற்கு வெள்ளை மந்தார என்று மறுநாமம் உண்டு.

**பாரிஜாத மரம் :** இம்மரத்தின் அடியில் நின்று ஸ்ரீ ஆஞ்சநேயரை தியானித்து வழிபட்டால் நோயற்ற வாழ்வு கிட்டும். நீண்ட ஆயுள், செல்வ வளம் உண்டாகும்.

**பறாய் மரம் :** திருப்பறாய்த்துறை சிவாலய தல விருட்சம். மின்னலில் இருந்து பாதுகாக்கும்.

**தித்தி மரம் :** இம்மரத்தின் அடியில் நின்று ஸ்ரீ நித்திலேஸ்வரரை தியானித்து வழிபட்டால் புத்திர தோஷம் நீங்கும்.

**- லக்ஷ்மி சிவம்**